# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 169/ந/2025, நாள். 27.10.2025

V.சரவணக்குமார்,
சின்னவடவள்ளி,
கோயம்புத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி ஆணையர்,
காரமடை நகராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.
2) சுரேஷ்கோபால், காரமடை,
கோயம்புத்தூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்கள்
3) டெல்மா ஜெயசீலன், காரமடை,
கோயம்புத்தூர் மாவட்டம்.

கோயம்புத்தூர் மாவட்டம், பொகளூர் வழி, சின்ன வடவள்ளி அஞ்சல், பெரியவடவள்ளி, எண்.6/46, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.சரவணக்குமார் என்பவரது 13.03.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2025 அன்று பெறப்பட்டு, 169/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், பொகளூர் வழி, சின்ன வடவள்ளி அஞ்சல், பெரியவடவள்ளி, எண்.6/46, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.சரவணக்குமார் என்பவர் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ள 19.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கட்டிட உரிமம் எண்.437/2022–23, வார்டு எண்.3 அன்னை வேளாங்கன்னி நகர், கோயம்புத்தூர் மெயின் ரோடு, ஆர்.சுரேஷ் கோபால் என்பவர் தரைத்தளம் 1962 சதுர அடிக்கு கமர்சியல் கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுக்கொண்டு சுமார் 6000 சதுரடிக்கு மேல் விதிகளை மீறி கட்டிடம் கட்டியுள்ளார். பார்கிங் பகுதி விடப்படவில்லை. பக்க திறவிடங்கள் விடப்படவில்லை. இக்கட்டிடத்திற்கு பின்புறம் நகராட்சி வழிப்பாதையில் அனுமதியின்றி சாக்கடை கட்டியுள்ளார். ஆகவே தாங்கள் நேரடி ஆய்வு செய்து விதிமீறிய கட்டிடத்தை அகற்றி கட்டிட உரிமையாளர் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் நடவடிக்கையின் விபரத்தை எனக்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்". எனதெரிவித்துள்ளார்.

மேலும் ஆணையர், காரமடை நகராட்சிக்கு மனுதாரர் தனது 28.10.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"காரமடை நகராட்சிக்குட்பட்ட காந்தி மைதானம் எதிரே வார்டு டெல்மா ஜெயசீலன் என்பவர் கமர்சியல் கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுள்ளார். இவர் வரைபடத்தில் உள்ள பார்கிங் பகுதி விடாமல் தன் இஷ்டம் போல் கட்டிடம் கட்டி வருகிறார். மேற்படி வரைபடத்தில் உள்ளவாறு கட்டிடம் கட்ட தாங்கள்நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் நடவடிக்கையின் விவரத்தை எனக்கு தெரியப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்".என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரது புகார் குறித்து காரமடை நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 23.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. காரமடை நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.2345/2025/எப்1/ நாள் 10.06.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மனுவின் மீது நகரமைப்பு ஆய்வாளர் நடவடிக்கை மேற்கொண்டு மனுவில் குறிப்பிட்டுள்ள கட்டிடங்களை நேரடியாக களஆய்வு செய்து கீழ்காணும் அறிக்கையினை பணிந்து சமர்ப்பித்துள்ளார்.

<u>அனுமதி வழங்கப்பட்ட கட்டிடங்களின் விவரம் கீழ்கண்டவாறு</u>

1. <u>திரு. சுரேஷ்கோபால் என்பவரின் கட்டிடம்</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கோவை–மேட்டுப்பாளையம் மெயின் ரோடு, ஐயப்பன் கோவில் அருகில், க.ச.எண்.708/1A, மனை எண்.1A & 1B-ல், திருசுரேஷ்கோபால் என்பவர் வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட விண்ணப்ப எண். 2976/2022/எப்1, கட்டிட உரிம எண்.437/2022–2023 நாள் 09.12.2022 என்ற எண்ணில் 182.28 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளார்கள். இட ஆய்வின்போது மனையிடத்தில் தரைத்தளத்தில் 234.20 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டி வணிக உபயோக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி மனையிடத்தில் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டிடம் கட்டியுள்ளதால் நகர் ஊரமைப்புத் துறை சட்டம், 1971 ஆம் வருடத்திய பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>2. திருமதி. டெல்மா ஜெயசீலன் என்பவரின் கட்டிடம்</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கோவை–மேட்டுப்பாளையம் மெயின் ரோடு, வார்டு எண்.26ல் க.ச.எண்.79/A1A–ல் திருமதி.டெல்மா ஜெயசீலன் என்பவர் வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட விண்ணப்ப எண். 167/CP/24-25/0000914, கட்டிடஉரிம எண். 167/BL/2024/00202 என்ற எண்ணில் தரைத்தளத்தில் 29.59 ச.மீ மற்றும் முதல் தளத்தில் 25.12 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளார்கள். இட ஆய்வின்போது மனையிடத்தில் தரைத்தளத்தில் 62.10 ச.மீ மற்றும் முதல் தளத்தில் 62.10 ச.மீ. பரப்பளவில் கட்டிடம் கட்டி வணிக உபயோக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி மனையிடத்தில் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டிடம் கட்டியுள்ளதால் நகர் ஊரமைப்புத் துறை சட்டம், 1971 ஆம் வருடத்திய பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது". எனத்தெரிவித்துள்ளார்.

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான காரமடை நகராட்சி ஆணையர் மற்றும் கட்டிட உரிமையாளர்கள் ஆகியோரை 03.07.2025அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. V.சரவணக்குமார் என்பவர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்:-

திரு. ஆர். சுரேஷ்கோபால் என்பவர் காரமடை நகராட்சி, வார்டு எண்.3 அன்னை வேளாங்கன்னி நகர், கோயமுத்தூர் மெயின்ரோட்டில் கமர்சியல் கட்டிடம் தரைத்தளம் 1962 சதுர அடிக்கு கட்ட கட்டிட உரிமம் எண்.437/2022–2023–ல் அனுமதி பெற்றுக்கொண்டு சுமார் 6000 சதுரடிக்குமேல் விதிகளை மீறி கட்டிடம் கட்டியுள்ளார். பார்கிங் பகுதி விடப்படவில்லை. பக்க திறவிடங்கள் விடப்படவில்லை.

திருமதி. டெல்மா ஜெயசீலன் என்பவர் காரமடை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26, காந்தி மைதானம் எதிரே கமர்சியல் கட்டிடம் கட்டுவதற்கு கட்டட அனுமதி பெற்று, கட்டிட வரை படத்திலுள்ள பார்க்கிங் பகுதியினை விடாமல் தன் இஷ்டம்போல் கட்டிடம் கட்டியுள்ளார். இது குறித்து ஏற்கெனவே நான் புகார் அளித்திருந்தேன்.

எனவே, அனுமதிக்கு மாறாகவும், விதிமுறைகளுக்கு முரணாகவும் கட்டப்பட்ட மேற்படி இரு கட்டிங்களையும் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஏற்கெனவே நான் அளித்த புகாரின் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த விசாரணை நடந்திருக்காது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

6) எதிர் மனுதாரராகிய காரமடை நகராட்சி ஆணையர், திருமதி. அ.மதுமதி மற்றும் காரமடை நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர் (பொ) திருமதி. N. மீனாட்சி, ஆகியோர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர்:-

திரு. சுரேஷ்கோபால் என்பவர் காரமடை நகராட்சி எல்லைக்குட்பட்ட கோவை–மேட்டுப்பாளையம் மெயின் ரோடு, ஐயப்பன் கோவில் அருகில், க.ச.எண்.708/1A, மனை எண்.1A மற்றும் 1B-ல், வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட விண்ணப்ப எண்.2976/2022/எப்1, கட்டிட உரிம எண்.437/2022–2023 நாள் 09.12.2022–ல் 182.28 ச.மீ. பரப்பளவில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்று மேற்படி மனையிடத்தில் தரைத்தளத்தில் 234.20 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டப்பட்டு வணிக பயன்பாட்டில் இருந்து வருவது தல ஆய்வில் தெரியவந்தது. எனவே, மேற்படி மனை இடத்தில் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் வணிக கட்டிடம் கட்டியுள்ளதற்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் 27.02.2025, 06.05.2025 ஆகிய நாட்களில் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டது. இறுதியாக கட்டிட உரிமையாளருக்கு 20 நாட்கள் அவகாசம் அளித்து 04.06.2025–ல் அறிவிப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேற்படி கட்டிடத்தை கட்டிட உரிமையாளர் வரன்முறைபடுத்த வில்லை என்றால் மாண்பமை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல் மற்றும் சட்ட விதிகளின்படி நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தமிழ்நாடு முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், மனுதாரர் தெரிவித்துள்ள மற்றொரு கட்டிட உரிமையாளரான திருமதி.டெல்மா ஜெயசீலன் என்பவரால் காரமடை நகராட்சி எல்லைக்குட்பட்ட கோவை–மேட்டுப்பாளையம் மெயின் ரோடு, வார்டு எண்.26ல் க.ச.எண்.79/A1A-ல் வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட விண்ணப்ப எண்.167/CP/24-25/0000914,கட்டிட உரிம எண்.167/BL/2024/00202-ல் தரைதளத்தில் 29.59 ச.மீ மற்றும் முதல் தளத்தில் 25.12 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ள நிலையில், தரைதளத்தில் 62.10 ச.மீ மற்றும் முதல் தளத்தில் 62.10 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டி வணிக பயன்பாட்டில் செயல்பட்டு வருவது தல ஆய்வில் தெரியவந்தது. மேற்படி மனையில் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் வணிக கட்டிடம் கட்டியுள்ளதற்கு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் 04.06.2025 மற்றும் 19.06.2025 ஆகிய நாட்களில் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. கட்டிட உரிமைதாரர் 17.06.2025–ல் ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார். மேற்படி கட்டிடத்தை கட்டிட உரிமையாளர் வரன்முறைபடுத்த வில்லை என்றால், மாண்பமை உயர்நீதிமன்ற வழிகாட்டுதல் மற்றும் சட்ட விதிகளின்படி நகராட்சியால்

நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தமிழ்நாடு முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்". என தெரிவித்துள்ளனர்.

7) 2வது எதிர்மனுதாரரான திரு.சுரேஷ்கோபால் என்பவர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்:-

"காரமடை நகராட்சி எல்லைக்குட்பட்ட கோவை–மேட்டுப்பாளையம் மெயின் ரோடு, ஐயப்பன் கோவில் அருகில், மனை எண்.1A மற்றும் 1B-ல், வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு விண்ணப்பித்து அதன்படி கட்டிடம் கட்டப்பட்டு வணிக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மனுதாரர் தெரிவித்துள்ள புகாரை சரி செய்ய மேற்படி கட்டிடத்திற்கு பின்புறம் உள்ள 13 செண்ட் இடத்தில் கார் பார்க்கிங் வசதி ஏற்படுத்திக் கொடுக்கிறேன். மேலும், set back–ஆக பக்க வாட்டில் இடம் விடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்கிறேன் என்று இதன்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்". என தெரிவித்துள்ளார்.

8) 3வது எதிர்மனுதாரரான திருமதி. டெல்மா ஜெயசீலன் என்பவரின் சார்பாக அவரது கணவர் திரு. வி.ஜெயசீலன் என்பவர் 03.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு அளித்துள்ளார்:-

"காரமடை நகராட்சி எல்லைக்குட்பட்ட கோவை–மேட்டுப்பாளையம் மெயின் ரோடு, வார்டு எண்.26ல் க.ச.எண்.79/A1A-ல் கட்டப்பட்டுள்ள வணிக கட்டிடம், கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டிருப்பது குறித்து எனக்குத் தெரியாது. காரமடை நகராட்சி ஆணையர் இன்றைய விசாரணையின்போது மேற்படி கட்டிடம் கட்டிட உரிம எண்.167/BL/2024/00202-ன் படி தரைத்தளம் 29.59 ச.மீ மற்றும் முதல் தளம் 25.12 ச.மீ பரப்பளவில் கட்டிடம் கட்டப்பட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக தரைத்தளம் 62.10 ச.மீ மற்றும் முதல் தளம் 62.10 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டிருப்பது குறித்து தெரிவித்ததை நான் அறிந்து கொண்டேன். மேற்படி கட்டிடத்தை சரிசெய்ய ஆவன செய்கின்றேன் என்று இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்." எனத்தெரிவித்துள்ளார்.

9) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான காரமடை நகராட்சி ஆணையரின் அறிக்கை, காரமடை நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் (பொ) ஆகியோரது வாக்குமூலம் மற்றும் கட்டிட உரிமையாளர்களின் வாக்குமூலங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

கோயம்புத்தூர் மெயின்ரோடு, ஆர்.சுரேஷ் கோபால் என்பவர், கட்டிட உரிமம் எண்.437/2022–2023, வார்டு எண்.3, அன்னை வேளாங்கன்னி நகர் என்ற முகவரியில் தரைத்தளம் 1962 சதுர அடிக்கு கமர்சியல் கட்டிடம் கட்ட அனுமதி பெற்றுக்கொண்டு சுமார் 6000 சதுர அடிக்கு மேல் விதிகளை மீறி கட்டிடம் கட்டியுள்ளார் எனவும், பார்க்கிங் பகுதி விடப்படவில்லை எனவும், பக்க திறவிடங்கள் விடப்படவில்லை எனவும், இக்கட்டிடத்திற்கு பின்புறம் நகராட்சி வழிப்பாதையில் அனுமதியின்றி சாக்கடை கட்டியுள்ளார் எனவும், மேலும் காரமடை நகராட்சிக்குட்பட்ட காந்தி மைதானம் எதிரே டெல்மாஜெயசீலன் என்பவர் கமர்சியல் கட்டிடம் கட்ட அனுமதி பெற்று, வரைபடத்தில் உள்ள பார்கிங் பகுதி விடாமல் தன் இஷ்டம் போல் கட்டிடம் கட்டி வருகிறார் எனவும், உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார்.

காரமடை நகராட்சி எல்லைக்குட்பட்ட கோவை – மேட்டுப்பாளையம் மெயின் ரோடு, ஐயப்பன் கோவில் அருகில் க.ச.எண்708/1A, மனை எண்.1A & 1B–ல், திரு.சுரேஷ் கோபால் என்பவர் வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட விண்ணப்ப எண்.2976/2022/எப்1, கட்டிட உரிம எண்.437/2022–2023 நாள்.09.12.2022 என்ற எண்ணில் 182.28 ச.மீ. பரப்பளவில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளதும், இட ஆய்வின்போது மனையிடத்தில்

தரைத்தளத்தில் 234.20 ச.மீ. பரப்பளவில் கட்டிடம் கட்டி வணிக உபயோக பயன்பாட்டில் இருந்து வருவதும், மேற்படி மனையிடத்தில் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டிடம் கட்டியுள்ளதால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதும் மேலும் காரமடை நகராட்சிக்குட்பட்ட கோவை–மேட்டுப்பாளையம் மெயின் ரோடு, வார்டு எண்.26ல் க.ச.எண்.79/A1A–ல் திருமதி.டெல்மா ஜெயசீலன் என்பவர் வணிக உபயோக கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட விண்ணப்ப எண்.167/CP/24–25/0000914, கட்டிட உரிம எண்.167/BL/2024/00202–ல் தரைத்தளத்தில் 29.59 ச.மீ. மற்றும் முதல் தளத்தில் 25.12 ச.மீ. பரப்பளவில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளதும், இட ஆய்வின்போது மனையிடத்தில் தரைத்தளத்தில் 62.10 ச.மீ. பரப்பளவில் கட்டிடம் கட்டி வணிக உபயோக பயன்பாட்டில் இருந்து வருவதும், மேற்படி மனையிடத்தில் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும், கட்டிடம் கட்டியுள்ளதால் தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் காரமடை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி ஆணையர், நகரமைப்பு ஆய்வாளர்(பொ) ஆகியோரது வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் தெரிவித்துள்ள புகாரை சரி செய்ய வணிக பயன்பாட்டில் இருந்து வரும் தனது கட்டிடத்திற்கு பின்புறம் உள்ள 13 செண்ட் இடத்தில் கார் பார்க்கிங் வசதி ஏற்படுத்தி கொடுக்கவும், மேலும் set back ஆக பக்கவாட்டில் இடம் விடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் 2ஆம் எதிர்மனுதாரரான திரு.சுரேஷ்கோபால் என்பவரது வாக்குமூலத்திலிருந்தும், அனுமதிக்கு மாறாக தரைத்தளம் 62.10 ச.மீ. மற்றும் முதல் தளம் 62.10 ச.மீ.பரப்பளவில் கட்டிம் கட்டப்பட்டிருப்பது குறித்து அறிந்து, தனது கட்டிடத்தை சரி செய்ய ஆவன செய்கிறேன் என 3வது எதிர்மனுதாரரான திருமதி.டெல்மா ஜெயசீலன் என்பவரின் சார்பில் ஆஜரான அவரது கணவர் திரு.ஜெயசீலன் என்பவரின் வாக்குமூலத்திலிருந்தும் தெரிய வருகிறது.

இந்நிலையில், மேற்படி அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் கட்டப்பட்டிருக்கும் கட்டிடங்கள் தொடர்பாக மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகளை கருத்திற்கொண்டு, காரமடை நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர்(பொ) தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 56 மற்றும் 57–ன் கீழ் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் காரமடை நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 27–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு,அலுவலகமுத்திரையுடன்இவ்வாணைவெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.V.சரவணக்குமார்,
6/46, பெரியவடவள்ளி,
சின்னவடவள்ளி அஞ்சல்,
பொகளூர் வழி – 641 697. கோயம்புத்தூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
காரமடை நகராட்சி,
காரமடை. கோயம்புத்தூர் மாவட்டம்.

3) திரு.சுரேஷ்கோபால்,
கட்டிட உரிமையாளர்,
க.ச.எண்.708/1–A,மனை எண்.1A&B,
ஐயப்பன் கோவில் அருகில்,
மெயின்ரோடு, காரமடை. கோயம்புத்தூர் மாவட்டம்.

4) திருமதி.டெல்மா ஜெயசீலன்,
வார்டு எண்.26, கச.எண்.79/A1A,
கோவை–மேட்டுப்பாளையம் மெயின் ரோடு,
காரமடை. கோயம்புத்தூர் மாவட்டம்.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்.
இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்